23rd March 1960]

Sri K. RAMACHANDRAN : முதுகுளத்தூர் பகுதியில் நிறைய ரோடுகள் போடுவதற்காக பணம்செலவழிக்கப்படுகிறது. புது ரோடுகளும் போடப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு ஆண்டுகாலத்தில் எத்தனை புது ரூட்கள் அங்கு “ஓப்பன்” செய்யப்பட்டிருக்கிறது ?

The Hon. Sri V. RAMAIAH : எத்தனை புது ரூட்கள் திறக்கப் பட்டன என்பதுபற்றிய தகவல் என்னிடம் இப்பொழுது இல்லை. போக்கு வரத்திற்கு தகுதியான ரஸ்தாக்கள் இருந்தால் அங்கு காலதாமதப்படுத் தாமல் ரூட் கொடுக்க எல்லாவித நடவடிக்கைகளும் எடுத்துக்கொள்ளலாம்.

Tamil Development and Research Council

* 503 *Q.*—(Main question was put and answered on 22nd March 1960).

Sri T. S. RAMASWAMI : May I know, Sir, how many text-books have already been prepared and how many translations have been supplied to the Committee?

The Hon. Sri C. SUBRAMANIAM : All the details are given in the report placed on the table of the House and they are now under print.

Sri V. K. KRISHNAMOORTHY : சயின்ஸ் என்ற பகுதியில் நூல்களை வரைவதற்கு கலைச் சொற்கள், டெக்னிகல் டெர்ம்ஸ் பற்றி தமிழ் வளர்ச்சிக் கழகம் கொண்ட முடிவு என்னவென்று அறிய விரும்பு கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : ஒரு தனி குழு நியமிக்கப் பட்டு ஒவ்வொரு பகுதிக்கும் கலைச் சொற்கள் ஆக்கப்பட்டு அச்சடிக்கப்பட்டு எல்லோருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. ஸயன்ஸைப் பொறுத்த வரை யில் இன்டர்நாஷனல் டெக்னிகல் டெர்ம்ஸ்-ஸை கூடிய வரையில் உப யோகிக்க வேண்டுமென்பது சர்க்கார் கொள்கை.

Sri K. ANBAZHAGAN : கல்லூரி மாணவர்களுக்குத் தமிழில் பாடம் பயிற்றுவதற்கு சில குறிப்பிட்ட பாட புத்தகங்களை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்ப்பது மட்டுமல்லாமல் பொது வாக விஞ்ஞானத்தில் உள்ள சிறந்த புத்தகங்களையும் தமிழில் மொழி பெயர்க்க அரசாங்கம் ஏதாவது திட்டமிடுமா ? அப்படிப் பல புத்தகங்கள் வெளிவரும் போது தான் தமிழின் தரம் விஞ்ஞானத் துறையில் வளரும் என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அங்கத்தினர் அவர்கள் சொன்ன யோசனைக்கு நான் நன்றி செலுத்த விரும்புகிறேன். இது பற்றி இன்று எடுத்துக் கொண்டிருக்கக்கூடியது, கல்லூரியைப் பொறுத்த வரையில் பீ. ஏ. பாடங்கள் மட்டும்தான் தமிழில் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. அதற்கு, பல புத்தகங்கள் இன்று தமிழில் ஒவ்வொரு ஸப்ஜெக்ட் பற்றியும் எழுத முன்வந்திருக் கிறார்கள். முக்கியமாக கொஞ்ச காலத்திற்கு ஆங்கிலத்திலுள்ள புத்தகங் களை நம்பித்தான் இதில் இறங்க வேண்டியிருக்கிறது. ஆகவே தமிழ் புத்தகங்களை படிப்பதோடு மட்டும் மாணவர்கள் நின்று விடக்கூடாது. ஆங்கிலப் புத்தகங்களையும் படித்து, அவைகளை ரெபரன்ஸ் புத்தகங்களாக வைத்துக்கொள்ள வேண்டும்.

Sri T. S. RAMASWAMY : பல புத்தகங்களை மொழி பெயர்க்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தபோதிலும் அதில் பல கஷ்டங் கள் இருப்பதால், பழையபடியும் யாரும் வராததால், பேராசிரியர்களிடம் ஒப்புவிப்பதாக இதில் தகவல் கூறுகிறது. பெப்ரவரிக்கு முன்னால் அதை சமர்ப்பிக்கவேண்டும்மென்று தாக்கீது கொடுத்திருப்பதாக தெரிகிறது. 1960–61 பள்ளி ஆண்டில் அவர்கள் சமர்ப்பிக்கவேண்டும், ஜூனுக்கு முன்னால் கொடுக்கவேண்டுமென்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. இந்த பாடங் களில் எத்தனை பாடங்களை அவர்கள் மொழி பெயர்த்து சமர்ப்பித்தார்கள்?

[23rd March 1960

THE HON. SRI C. SUBRAMANIAM : எத்தனை சமர்ப்பித்தார்கள் என்று இப்பொழுது சொல்லமுடியாது. அதில் குறிப்பிட்ட கால அட்டவணைப் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்றுதான் பொதுவாகச் சொல்ல முடியும்.

SRI S. LAZAR : இந்த ஆராய்ச்சிக் குழுவில் தீவிரவாதிகள் மட்டும்தான் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பது உண்மையா ? அந்த தீவிரவாதிகள் எல்லாப் பதங்களையும் தமிழ் படுத்த வேண்டுமென்று முனையும் போது அதனால் பொதுமக்களுக்கு பல சங்கடங்கள் ஏற்படுவது உண்மையா ? சாதாரணமாக பொதுமக்களிடம் நிலவி வரும் சொற்களை, ஆங்கிலத்தில் இருக்கும் சில சொற்களை ஏற்றுக்கொள்ளும் முறையில், பழக்கத்தில் இருந்து வரும் சொற்களை அப்படியே வைத்துக்கொள்ள அரசாங்கம் அவர்களுக்கு டயரக்ஷன் கொடுக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தீவிரவாதி என்று சொல்வதின் அர்த்தத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இதில் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். இதன் தலைவராக இருக்கக்கூடியவர், ஸ்ரீ ஜீ. ஆர். தாமோதரன். அவர்கள் என்ஜினியரிங், ஸயன்ஸ் இவைகளில் தேர்ச்சி பெற்றவர். அவரை தீவிரவாதி என்றோ மிதவாதி என்றோ எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. எந்த முறையில் பாடப் புத்தகங்கள் அமைந்தால், எந்த முறையில் மொழிபெயர்த்தால் சரியாக இருக்குமோ அப்படிச் செய்வார்கள். இப்பொழுது நாம் ஏற்படுத்தக்கூடிய கலைச் சொற்கள் அப்படியே நிலைத்து இருக்க வேண்டுமென்பதில்லை. நமது அனுபவத்தின்பேரில் எதையாவது மாற்றிக்கொள்ள வேண்டுமென்றால் அப்படி மாற்றிக்கொள்ளலாம் என்ற அடிப்படையில் தான் கலைச் சொற்கள் அமைத்து வருகிறார்கள்.

SRI A. A. RASHEED : Sir, from the papers placed on the table of the House, out of 51 books, 7 books are being translated. So, will the Government postpone the introduction of Tamil until all the books are translated? Also, why not the Government entrust the work of translation to the University?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not think the University as such will be able to translate any book. It will have to be done by professors and other persons who are proficient in English as well as in Tamil. Therefore, we will have to select persons who are competent to translate. As a matter of fact, the Chairman of the Board of Studies and many other people have undertaken to write books. Therefore, the hon. Member need not be under the impression that some Tom, Dick and Harry are being entrusted with this work. I do not know why the hon. Member is so anxious that it should be postponed but on the other hand we are trying our best to see that we stick to the time table.

SRI A. VEDARATHNAM : இந்த மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற எட்டின் இரண்டாவது பக்கத்தில் ஐந்தாவது உப பாராவில் " தமிழ் டெவலப்மெண்ட் அண்ட் ரிசர்ச் கௌன்சில் " 1955–வது வருடத்திலேயே நியமிக்கப்பட்டிருந்தபோதிலும்கூட அதன் அறிக்கை இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. அந்த பொறுப்பு யாரைச் சேர்ந்தது ? இதுவரையில் இந்த ரிப்போர்ட்டை சமர்ப்பிக்காது இருப்பதற்கு யார் காரணம் ? ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்பட வேண்டிய தேதி குறிப்பிடப் பட்டிருந்ததா ? இதுவரையில் ரிப்போர்ட் வராததற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 1955-ம் ப்ரின்சிபால்கள் எல்லோரையும் கூட்டி வைத்து தமிழ்மொழியை போதனா மொழியாக ஆக்குவது பற்றி அவர்கள் ஆலோசனை கேட்கப்பட்டது. அங்கு சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் நடவடிக்கைகள் எடுப்பதற்காக

ஒரு குழு நியமிக்கப்பட்டது. அதில் எல்லோரும் பங்கு கொண்டிருக்கிறார்கள் அந்தக் குழு ஒரு தடவை கூடிற்று. பின் அது கூடாமல் எந்தவித அறிக்கையும் சமர்ப்பிக்கவில்லை. அந்தக் காரணத்தால்தான் அதற்கு பிற்பாடு வேறு நடவடிக்கைகள் சர்க்கார் எடுக்கவேண்டியதாயிற்று. 1959-ல் ''தமிழ் டெவலப்மெண்ட் அண்ட் ரிசர்ச் கௌன்சில்'' நியமிக்கப்பட்டது. ஆகவேதான், 1955-ல் ஏற்படுத்தப்பட்ட குழு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்காததால் வேறு ஒரு குழு நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

Export of handloom silk goods

* 519 Q.—Sri S. M. ANNAMALAI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

ரஷ்யாவுக்கு கைத்தறிப் பட்டுத்துணிகள் ஏற்றுமதி செய்வது குறித்து மாநில சர்க்காருக்கு மத்திய சர்க்காரிடமிருந்து தகவல் ஏதேனும் உண்டா ?

The Hon. Sri R. VENKATARAMAN : The Government have no information.

Sri S. M. ANNAMALAI : ஸார், ரஷ்யாவில் நம்முடைய மாநிலத்தில் தயாரிக்கப்படும் கைத்தறிப் பட்டுக்கு அதிகமாக கிராக்கி இருக்கிறது என்பது சர்க்காருக்கு தெரியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : அந்த மாதிரியான தகவல் சர்க்காரிடத்தில் இல்லை.

Srimathi P. K. R. LAKSHMIKANTHAM : தலைவர் அவர்களே, அமெரிக்காவில் நம் நாட்டு பட்டுத்துணிக்கு மிகவும் பிரியம் இருப்பதாக சொல்லப்படுவது உண்மையா ? அப்படியானால் அந்த நாட்டில் எந்த அளவுக்கு நம் நாட்டுத் துணி செலவாகின்றது ?

The Hon. Sri R. VENKATARAMAN : ஓரளவு அமெரிக்க நாட்டில் இந்திய நாட்டுத் துணிகளுக்கு கிராக்கி இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு எந்த அளவுக்கு ஏற்றுமதி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது.

Opening of zoos

* 520 Q.—Sri A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state whether the Government have received any request from the Municipalities of Madurai and Coimbatore for Government grant to open zoos in the respective municipalities?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : No, Sir.

* 521 Q.—Sri S. LAZAR (On bhalf of Sri P. S. K. LAKSHMIPATHI RAJ ; கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

மதுரைமாநகரில் ஒரு மிருகக் காட்சி சாலை அமைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The question of opening a Zoological Park at Madurai is under consideration.

Sri A. A. RASHEED : When will it be opened? Will the Government give grant?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : It is just under consideration. I cannot say when it will be opened. When the proposal is taken up, the question of subsidy and all that will be considered.